DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | } CC.17 /2016 PW 2 (LW 2 ) |
| Preliminary Register | } |
| Name | } சுஜிதா |
| Father's name | } |
| Taluk | } |
| Village | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or
**Date 10.07.2023**

**5 ஆம் எதிரி ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜரில்லை. 3, 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் கோவை இராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 என்னுடைய தாயார். 1 ம் எதிரி உகாண்டாவில் வேலை செய்து வருகிறார். எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் அசா1 உடன் 1 ம் எதிரி நல்லமுறையில் வாழவில்லை. 1 ம் எதிரி நல்ல முறையில் வாழததற்கு காரணம் மற்ற எதிரிகள் தான். எப்போதும் அடி உதைதான். பள்ளிக்கட்டணம் எனக்கு கட்டுவதற்கு கூட அவர்களிடத்தில் போய் நின்று கெஞ்சி தான் பணம் வாங்கி வருவார். என் அப்பாவின் சம்பளத்தொகையை மற்ற எதிரிகள் வந்து வாங்கிவிடுவார்கள். அடிக்கடி வீடு மாறிக்கொண்டு தகராறு செய்து வருவார்கள். என் அம்மாவை கட்டையாலும் ஒயராலும் அடித்து கொடுமைப்படுத்துவார்கள். பணத்திற்காக என் அம்மாவை எதிரிகள் கொடுமை செய்துள்ளார்கள். என் அம்மா வீட்டு வேலை செய்து என்னை காப்பாற்றினார்கள். என் அம்மா வேலை செய்த வீட்டிலும் வந்து எதிரிகள் தகராறு செய்வார்கள்.

2) என் அப்பா ஒரு முறை பஸ்சில் வைத்து என்னை அடித்தார். அப்போது மற்ற எதிரிகள் பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள். 1 ம் எதிரி வெளிநாட்டில் இருந்து வந்த போது எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து தகராறு செய்தார்கள். 1 ம் எதிரி எங்கள் குடும்ப செலவிற்கு பணம் எதுவும் தரவில்லை. நான் தான் என் அம்மாவை பராமரித்து வருகிறேன். என் அப்பா என் அம்மாவிற்கு சாப்பாட்டிற்கு கூட பணம் தரவில்லை. என் அப்பா என் அம்மாவை கொடுமை செய்ததற்கு எனது தகப்பனாரின் குடும்பத்தார்கள் தான் முக்கிய காரணம். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு தற்போது 37 வயதாகிறது. போலீசார் என்னை விசாரித்த போது நான் பழனியில் குடியிருந்து வருவதாகச்சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 2008 ம் ஆண்டு திருமணம் நடந்தது. என்னுடைய மகனுக்கு 11 வயது ஆகிறது. என் அம்மாவின் பெற்றோர்கள் குன்னூர் டீ எஸ்டேட் பகுதியில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் அம்மாவும் குன்னூர் டீ எஸ்டேட்டில் தான் பிறந்து வாழ்ந்து வந்தார்கள். என் அம்மா குடியிருந்து வந்த பக்கத்து வீட்டில் தான் எதிரிகள் குடும்பத்தினர் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பாவும் அம்மாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் பெற்றோருக்கு எந்த ஆண்டில் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. என் அப்பா அம்மா திருமணத்திற்கு இரண்டு வீட்டாரும் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. அம்மா வீட்டில் மட்டும் தான் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

2) குடும்பத்தை எதிர்த்து தான் என் அப்பாவும் அம்மாவும் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. இரு தரப்பினரின் எதிர்ப்பினால் திருமணத்திற்கு பிறகு என் அப்பாவும் அம்மாவும் கோயமுத்தூருக்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. கோயமுத்தூருக்கு வேலை மாற்றுதலாகி வந்துவிட்டார். திருமணத்திற்கு பிறகு என் அப்பாவுடன் என் அப்பாவின் குடும்பத்தினர் 15 ஆண்டுகளாக தொடர்பில் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவின் பெற்றோரின் தூண்டுதலால் தான் என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. என் அப்பா என்னை ஒரு போதும் அடித்ததில்லை என்றும் செல்லமாகத்தான் வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல.
என் அப்பா 10 வது வரை படித்துள்ளார். என் அப்பா சிங்காநல்லூரில் உள்ள எல்ஜி கம்பெனியில் வேலை செய்து வந்தார். நாங்கள் குடியிருந்து வரும் வீடு என் அப்பா அம்மா பெயரில் தான் உள்ளதென்றால் சரிதான்.

3) அந்த வீடு 2005 ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல அப்பா என் அம்மாவை எப்போதும் அடித்து வந்தால் இரண்டு பேர் பெயரிலும் சொத்து வாங்கியிருக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவின் வற்புறுத்தலால் தான் வாங்கியுள்ளார். 1997 ம் ஆண்டில் என் அப்பா அம்மா பெயரில் காலி மனையிடம் ஒன்று வாங்கப்பட்டுள்ளதென்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் கொடுமைப்படுத்தியிருந்தால் இதுபோல சொத்து வாங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சொத்து வாங்கிய பிறகு சண்டை போட்டார்கள். எதிரிகளுக்கு தெரியாமல் தான் வீடு வாங்கப்பட்டது. என் பெற்றோரின் குடும்ப வாழ்க்கையில் எதிரிகள் தலையிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் குடியிருந்த வீட்டை சுற்றி வணிக வளாகங்கள் கடைகள் உள்ள பகுதியென்றால் சரிதான்.

4) நாங்கள் குடியிருக்கும் வீட்டருகே காவல் நிலையம் உள்ளதென்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். என் அம்மாவுக்கு எழுதப்படிக்கத் தெரியும். நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் என் அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவின் மேல் உள்ள வெறுப்பினால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பாவிற்கு தெரியாமல் காதல் திருமணம் செய்து கொண்டதால் என் அப்பா மனமுடைந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா என்ற முறையில் என்னை அவர் பராமரிக்கவில்லை.

5) என் அப்பாவின் சம்பளத்தை எதிரிகள் வாங்கியிருந்தால் நகரத்திற்குள் சொத்துக்கள் வாங்கியிருக்க முடியாது என்றும் எங்கள் நலனுக்காக 1 ம் எதிரி சொத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மாவும் சம்பாதித்த காசில் தான் இடம் வாங்கியுள்ளார். என் அம்மா சம்பாதித்த காசில் சொத்து வாங்கியதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மாவை உகாண்டாவிற்கு அழைத்து செல்ல விசா, பாஸ்போர்ட் ஏற்பாடு செய்தும் என் அம்மா தான் மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. விசா பாஸ்போர்ட் எதுவும் தயார் செய்யவில்லை. ஆனால் கேட்டார். நான் படித்துக்கொண்டிருந்ததால் செல்லவில்லை. பாஸ்போர்ட் விசா ஏற்பாடு செய்து தான் கேட்டார் என்றும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4 ம் எதிரி சிவன் பில்லூரில் தான் பணிபுரிந்து வந்தார் என்றும் கோயமுத்தூருக்கு அவர் வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

6) இரத்தினபுரியில் தான் அவர் வீடு உள்ளது. பில்லூரில் குவார்ட்ர்சில் குடியிருந்து வருகிறார் என்றும் யாருடைய தயவும் இன்றி வாழ முடியும் என்றால் சரியல்ல. என் அப்பாவிடமிருந்து தான் எதிரிகள் பணம் வாங்கி வந்தார்கள். என் அப்பா சம்பாதித்த காசை எங்கள் பெயரில் தான் சொத்து வாங்கியுள்ளார் என்றும் 1 ம் எதிரியின் பெற்றோரை அவர் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் வந்து பணம் வாங்கி செல்வார்கள். 5 ம் எதிரி ராஜ்குமார் சோலைமலை என்ற நிறுவனத்தில் வேலை கிடைத்ததால் தான் கோவை வந்தார் என்றும் எங்களுடன் வசிக்கவில்லை என்றால் சரிதான். ரத்தினபுரியில் வசித்து வந்தார். என் அப்பாவை அவமானப்படுத்தியதால் தான் என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையே உள்ள குடும்பப்பிரச்சனையில் காரணமாக எதிரிகள் மீது புகார் கொடுக்கப்பட்டதென்றால் சரியல்ல., என் அம்மாவின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதற்கு எதிரிகள் தான் காரணம். என் அப்பாவின் அம்மா இறந்துவிட்டார் என்பது தெரியும்.

ஆனால் எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. 2ம் எதிரி மீது பொய்யாக வழக்கு கொடுத்ததால் தான் அவர் மனது பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல,